T.971.

வேலுமயிலுந்துணை.

# திருப்போரூர் ஆற்றுப்படை.

MAR 1919
T 971

இது,

சென்னை வேப்பேரி எஸ் - பி - ஜி - ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமான், கா - நமசிவாயமுதலியா ரவர்கள்

மாணாக்கரும்,

சென்னை, ம-ா-ா-ஸ்ரீ. வீ - ஏகாம்பரம்பிள்ளை யவர்கள்

குமாரருமாகிய,

வீ - ஏ - முனிசாமிப்பிள்ளை யவர்களால்

இயற்றப்பெற்று,

—(o)—

(சில கனவான்களின் பொருளுதவியால்,)

மதராஸ் டைமண்ட் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1910.

—(०)—

1910

T. 971

# சிறப்புப்பாயிரங்கள்.

இந்நூலாசிரியரின் போதகாசிரியரும், மதுரைத் தமிழ்ச் சங்கப்புலவரும், சென்னை வேப்பேரி எஸ்-பி-ஜி ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதருமாகிய ஸ்ரீமான் கா-நமச்சிவாயமுதலியாரவர்கள் கூறியது.

## நிலைமண்டிலவாசிரியப்பா.

மலர்தலை யகந்தன் மணிமுடி சுமந்த
அலகில் சீர்சால் அவனிக் கண்ணே
மொய்த்த வரக்கர் மூட்டிய துயரை
மெய்த்தவ வடியோர் விளங்கிய முனிவரர்
தாங்கலாற் றாதே தனிப்பரஞ் சுடராய்
ஓங்கிய தாணுவின் உபயகற் றூளைப்
பரசிப் பரவிய பான்மைகா ரணமாய்
விரவிய நுதற்கண் வெளிப்படக் காட்டும்
தீப்பொறி தன்னிற் செறிந்த தூமணியாம்
செவ்வே ளன்று தீனரைக் காக்க
செவ்வே போந்து செருக்களத் துற்று
சூரன் மார்பகந் துகளறப் பிளந்து
நேரு மயிலும் சிவந்த கோழியுமா
யேலக் கொண்ட இறைவன் போர்செய்
கோலத் தோடே குலவிய தலமாம்
போரூர் தன்னைப் போற்றியப் பயனை

ஏரூர் ஆற்றுப் படையொன் றிசைத்தான்
கற்பகன் மகனைக் கற்பினிற் கொண்டோன்
வெற்பகன் மகளை விழைவினிற் கொண்டோன்
அகத்தியன் றனக்கன் றருந்தமிழ் மொழியை
உகப்புட னருளிய வுசவேர னடிக்கே
மன்னிய அன்பன் வைத்திய நூலிற்
றுன்னிய வறிஞன் தூயனல் லொழுக்கம்
தங்கிய சுகுணன் தமிழ்வல் லார்பால்
பொங்கிய நட்புப் பூண்டவன் பன்னூல்
அன்புறக் கற்றே யாய்ந்த புலவன்
சொன்னயம் முதலாச் சொன்னபன் னயமும்
தோன்றப் பாடுந் தூயநற் கவிஞன்
ஆன்ற வடக்கும் அமைந்த நல்லோன்
கனிசால் புடையோன் நாளு மோங்கும்
முனிசா மிப்பெயர் முதறி ஞன்னே

இது
சென்னை ஹிந்து தியூலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும்
வேதாந்தகவிராயருமாகிய
ஸ்ரீமான்-கோ-வடிவேலுசெட்டியாரவர்கள் கூறிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பேருரொன்றில்லாதுபேரின்பவடிவாகிப்பிறங்கா நின்ற
போரூர்வாழாறுமுகப்பெம்மான்றன்பொன்னடியைப்போற்றுமாறு
சீரூறப்போரூராற்றுப்படையென்றொருநூலைச்செவ்விதாக
வேருருமுனிசாமிப்பாவலனிங்கியற்றினன்மெய்ந்தான்மாதோ

ஜில்லா செந்தூர்-மஹாவித்துவான்

ஸ்ரீமான்-வீ-ஆறுமுகஞ்சேர்வை யவர்கள் கூறிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

படைக்கும் வினைக் கிழமையனைப் பண்டுசிறைப் படுத்தியமா பருதிவைவேற், படைக்குரியன் திருப்போரூர்ப் பனைபால ஞற்ற லெலாம் பரவப் பூதப், படைக்குமிகு நாயகனைப் போற்று சென்னை முனிசாமி பனியவாற்றுப், படைக்குவந்த வவன்புகழ்வ தன்றியிதன் பெருமை யிங்குப் புகர்வாரியாரே.

பச்சையப்பன்காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமான்-கா-ர-கோவிந்தராஜமுதலியாரவர்கள் கூறிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்பூத்த நறுங்கொன்றை பொலம்பூத்த திருமுடிக்கே பொலியச்சூடி, மின்பூத்த மலைவில்லான் விடம்பூத்த கண்டத்தான் விழைமைந்தன், கொன்பூத்த வேன்முருகன் குறைபூத்தோர் தமையளிக்குங் குணங்களெல்லாந், தென்பூத்த மொழியதனற் சீர்பூத்த வகைமுறையே தெரித்துக்காட்டி.

தேனூற்றும் விருந்தெனவே தேனினங்கள் சூழுமலர்த் தெரியலொப்பத், தானூற்றுப் படையென்னுந் தனித்தமிழ்மாலங்கலொன்று சாத்தினனால், வானூற்றும் பேரின்ப வளக்கூடலினிடைப்படியவைப்போன் போரூர்க், கோனூற்று மன்பினுக்கே குலமணக்கும் முருகனிருங் கோதிலருட்கே.

கலம்படிந்த மலர்தோறும் வண்ணிகின்ற பருகுகல் வண்டிற்செய்ய புலம்படிந்தோர் இடந்தோறும் புக்கரிய பண்ணா

லும் புரிவி னோர்ந்தோன், விலம்படிந்த நல்லறிவே வாய்ந் துள்ளோன் பொறையடக்க முதலாச்சொல் லுங், குலம்படி ந்த குணமுள்ளோன் கோதின்முனி சாமியெனக் குலவு வோனே.

சித்தாந்தசரபம் அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள் கூறிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நீற்றுக் குகந்த பெம்மா னருளி னிறைந்த சங்கர்
ஏற்றுப் பரிந்த பன்னூ னயத்தை யினிது ணர்ந்து
மாற்றுக் குயர்ந்த வொளிர்வேற் குமரன் மகிழ்நம் போரூர்
ஆற்றுப் படைசொற் றன்முனி சாமிநல் லறிஞன் றனே.

பாண்டியமண்டிலம் செவ்வல்டாநகரம் இயற்றமிழ்வித்துவான்

எம்-ஏ-ஷண்முகம்மதிப்பாவலரவர்கள் கூறிய

கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நிலவுமிழா யிரந்தலைமேல் விழுந்துகிடந் தகன்ஞாலங்கா நிலன்மற் றெல்லா, மலகிலெரிருநெடிப்பொழுதின் வலம் வந்த மயிலூர்தி யரற்கு மைந்தன், புலவனறு முகத்த வேள் புனக்குறத்தி மணவாளன் பூந்தாண் மூன்றும், வில குறுவான் போற்றியவன் றிருவருளே யெஞ்ஞான்றும் வே ண்டி மாதோ.

பழயசங்கத்தமிழ்க்கிழவோர் யாத்தன்று மிரீஇய நூற் பதங்கண் முற்றுங், குழுமியவா சுவைபழுத்த விழுமியகூற் றரும்பதங்கள் குனிக்க மற்றுங், கழகனைத்து நனிதூங்கி நமரங்க டிருப்போரூ ரடைந்துய்ம்மாறு, வழிபடுத்துந் தக வரயாற் றுப்படையொன் றருளினனால் வயங்க வந்நூல்.

4



கரும்புதரும் பாறருமுக் கனிதருங்கற் கண்டுதருங்
களிவண்டூத, வரும்புதரும் போதுதரும் புதுநறவு தருமி
ரசமனைத்துந் தைப்புத், தரும்புதருந் தமிழுலகு முனிவ
ரருமறத்தெளிந்த சான்றோர் யாரும், விரும்புதரும் பெரி
துபுகழ் தருமவனை யாமெடுத்து விளம்பு மாலோ.

துதிகாட்டுஞ் சந்த்ரதில காடவிவெற் பமர்முனிவன்
றெருகுத்த வைந்து, விதிகாட்டு மிலக்கணத்தை யிலக்கியத்
ளதக் கடைபோக விளங்கக் கற்றோன், சதிகாட்டும் பொரு
ண்மையெனும் பெருநோயர் சகவாசந் தடிந்தோன் சால, மதி
காட்டு மருத்துவத்தின் றிருத்துவத்துங் கைபோய
மாண்புமிக்கோன்.

க்திக்கவரும் பெரும்புலவ னெமக்கினிய வொருநண்
பன் காமன் மேரின், மதிக்கவருங் குடமுலையார் மடல்பொ
றித்துக் கிளியேந்து மார்பன் சென்னைப், பதிக்கவிரு மதி
யேகாம் பரன் றவத்து நற்புதல்வன் பாவல்லோர்க, டுதிக்க
வருநமதருமை முனிசாமி யென்றுயர்ந்த சொல்வலோனே.

---

மணிமங்கலம், தமிழ்ப்புலவர்

ஸ்ரீமான். திருநாவுக்கரசு முதலியாரவர்கள்

அறுசீர் விருத்தம்.

கருப்போரு ரவுணரிரி நிணவடிவேற் கரங்கொண்ட
காந்தன் ஞானப், பெருப்போரு ருஞற்றுவள்ளி தனைமண
ந்திவ் வுலகமெலாம் பெரிதுவக்கும், பருப்போரூர் செறிபழ
னஞ் செங்கெல்வான் றொடவளரும் பான்மைத் தாயத்,

T 971

திருப்போரூ ரிடைவதியுஞ் செவ்வேளின் றிருவடியே செய லென் றுன்னி.

கலந்தழைப்ப பெருஞான கவின்றழைப்ப பருணிதரே கண்டு நாளும், வலந்தழைப்ப பெரிதுமன வணந்தழைப்ப பரனடியார் வயங்கு சைவ, குலந்தழைப்ப குறைவிலா குடிதழைப்ப சங்கநூற் குறிக்குஞ் செய்யு, ணலந்தழைப்ப போரூராற் றுப்படையைப் புனைந்தணிந்தா னவனா ரென்னில்.

பொன்னாரும் பொதியவரை வருமுனிவன் றந்த தமிழ் பொருவி னாலா, முன்னாரு மிலக்கண விலக்கியமாங் கடற் குடித்து முனிவிலாது, கன்னாருஞ் சென்னைவயி னில்குறு வா னென்னிரண்டு கண்ணே போல்வான், தென்னாருங் கவிபுனையு முனிசாமி யென்னு தமிழ்ச் சிங்கமாதோ.

இது,

பல நூலாசிரியரும் கலியுகவர்த்தமானி பத்திராதிபருமாகிய

வித்துவான்.

மதுரை - கந்தசாமிபிள்ளையவர்கள் கூறிய

அறுசீர் விருத்தம்.

கொந்தாருந் தடமேவும் போரூர்வாழ் குமரகுரு கழற் கான்மீது, விந்தாரு வழிபடுத்து மோராற்றுப் படையொன்று விளம்பினால், வந்தாரு மாணவர்க்குத் தமிழ்புகட்டு மொரு நமச்சிவாய வள்ளாற், கந்தாரு மாணவனும் முனிசாமி யெனும் பெரிய கல்விமானே.

முற்றிற்று.

# முன்னுரை.

ஆற்றுப்படையென்பது தொண்ணூற்றறுபான் வகைப் பிரபந்தங்களுள் ஒன்று அவைதாம் ஆறுபடுத்தல் என்னும் பதம் ஆற்றுப்படையென்றாயதென்க; ஆறுபடுத்தல் வழியிற் படுத்தல் என்று பொருள் எனவே திருப்போரூர் ஸ்ரீமத் முருகரிடத்து வீடுபேற்றைப் பெற்றாஅ னொருவன், அவை பெறாஅ தார்க்குப் பெறுமாறு கூறி யவர்களை அக்கடவுளிடத்து வழிப்படுத்தலேயாம், என்னை புறப்பொருள் வெண்பாமாலை பாடாண்படலத்து அமரர்கண் முடியு மறுவகையாகிய கொடிநிலை கந்தழி வள்ளிகுணஞ்சால் என்புழிப் புலவரையவர்வயிற் புகழ்ந்தாற்றுப் படுத்தல் என்பதற்கு அருங்களவானத் தமரர்வயிற் பெரும் புலவனை யாற்றுப்படுத்தன்று என்பதுபோல், புலவனை யமரரிடத்து ஆற்றுப்படுத்தற் போலுமென்றாலோவெனின், நன்றுகடாயினாய் அஃதமரர்கண்முடியு மறுவகையானும் என்னுந் தொல்காப்பியப் புறத்திணை யியற் சூத்திரத்துப் போந்த பாடாண்டிணைக்கட் டெய்வப் பகுதியுளடங்கும் இவை கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப் பெற்ற பெருவளம் பெறாஅர்க்கறிவுறீஇச் சென்று பயனெதிரச் சொன்னபக்கமும் எனப்போதரும் மக்கட் பகுதியுளடங்கும் செந்துறைப் பாடாண் பாட்டே இஃதெனக் கொள்க. இதுகிடக்க அடியேன் சிற்றறிவுக்கெட்டிய வண்ணம். இந்நூலி யாத்திருப்பதால், குற்றங்களைந்து குறைபெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர்கடன் என்றபடி, பெரியோர்கள் முழுமுழுத லறிவன் முதல்வன் றந்த முருகபிரானின் பிரபந்தமென்றா, கைக்கொண்டு எம்மை இன்னும் அநேகப் பிரபந்தங்கள் செய்யும்படி உவப்பிப்பார்களென்று நம்புகின்றேம். சுபம். சுபம். சுபம்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 22 | காக்கவு | காக்கமு |
| 4 | 16 | வாக்கியந்தளி | வாக்கியந்தளிப் |
| 6 | 4 | குயிற்றி | குயிற்றிப் |
| 9 | 21 | எழுத்து | எழுத்துச் |

6

உ

MANUSCRIPTS

வேலுமயிலுந் துணை.

# தலவிநாயக வணக்கம்.

## நேரிசை யாசிரியப்பா.

மணிகட லுடுத்த வுலகெலாம் பயந்த
மலைமகட் புறமுறீஇய சிவன்கரவு வேணிக்
குருமதிக் கிளம்பலு நச்சார் பாந்தள்
பிணைத்தங் குணுமெனப் பீடார் நறவுகு
கடுக்கை யந்துணர் கரக்க விக்கூற்
றனைத்துங் கண்டாங் கதற்பட வொசிந்த
கொம்பென மருண்டு கொள்வா னன்ற
பாணிகொடு பிடிப்பப் பாய்புனன் முகந்துதன்
றந்தையைப் பழிச்சுந் தக்கோர் வானோர்
மீதினி திறும்பூ தெய்த வீசுபு
உளங்களி துளம்போர் பகர்திறற் கந்தன்
றுணைவிநனி வேட்ப துதைந்த மும்மத
வாரண வுருக்கொடு வந்தவண் டோன்றி
உயங்க லுளுற்றி யொப்ப நாடி
நெடுநா ளுழப்ப மாற்றினர் போலும்
பெருங்கரு ணைபுரி யருந்தவக் கொழுந்தாம்
குடவளை கவற்று வரிச்சிறை யன்னம்
பயில்பொழி லடர்திருப் போரூர் சூழ
னிறுவரை நிம்பத் தனிநிழ லமரு
மழவிளங் களிற்றைப் போற்றுதுஞ்
சிலையா வின்பந் தெளிதற் பொருட்டே.

(o)

# திருப்போரூர் ஆற்றுப்படை.

## நூல்.

### நேரிசை யாசிரியப்பா.

கடல்புடை யுடீஇய வளிகுலாங் கறங்கும்
விளம்பழும் புரையில் வளம்பொலி ஞாலத்
துலையாப் பெரும்பத மோவற வளிப்பேரின்
வேறுவே றணட்டும் விளம்பரு முயிரும்
பேதுற லின்றிப் பெரிதுவந் தமைத்தோ
ரிமையம் பூத்த வுமையுடன் றோன்று
மாண்டகைப் படைப்பின் மாண்டகு மண்பத்தித்
தலைமைத் தாமெனத் தகவுறு மறைபின்
மெத்திறத் தாலெனி னியப்புது கேண்மின்
பல்புகழ் மனுடப் படிவத் திற்கு
மஃறிணைத் தொகுதி யான்மாக் கட்குஞ்
சூழ்ந்திட லுறி னொன்று போந்தன மஃதாம்
மக்கட் குண்டாம் மாண்பகுத் தறிவே
யானுப் பிறந்தை யமைந்து மலந்தும்
பொய்யுரை கிளந்தும் பொச்சாப் புற்றும்
பிறர்பொருள் கவர்ந்தும் பிழைபல செய்யாப்
பாழ்வயிறு நிறைப்பப் பலபொருள் வெள்வியும்
மெய்யுடி யவரை நொயப்ப சினந்தும்
நல்லோ ருஞற்றும் நல்வினை காணுப்
பல்லோர் தமக்குப் பவமபல புரிந்தும்
கையறி யாமையிற் கடுங்கொலை புரிந்து
(குறள்) மறத்தி னூஉங் காக்கவு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லைக் கேடெனப் பொதுமறை

*புலவர் வாசகமு புந்தி னிறுவா
டாழ்பண மலந்தலைப் பன்னாட் கண்டும்
பாதலங் கரந்தும் பட்டிமை புரிந்தும்
நல்கூ ருடற்றும் நயந்தோர்க் கிடாது
பேதுறீஇ லோபப் பேர்கொண் டுலைந்தும்
மற்றோர் செல்வ வளத்தினைக் காண்குபு
நோனுது நாளும் நவலரும் படர்நோ
யுற்று வருந்தியு மொருவா தேங்கியு
(குறள) மன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மதுவெனப் பகரும்
நீதிய தறிவா லெண்ணி னறிவொடு
வருந்தலை யற்று வாணா ளளவுங்
கொடுஞ்செயல் வாழ்க்கையிற் படுஞ்செய லாற்றியும்
(குறள்) நலக்குரியார் யாரெனி னமநீர் வைப்பிற்
பிறர்க்குரி யாடோ டோயா தவரெனும்
வாக்கியுந் தவி பிறன் வாழ்க்கையைக் கவர்ந்துந்
தங்குழ லிளையைத் தாங்கியுந் தறுகண்
வதனமே பன்னுள் வாய்ப்பக் கொண்டும்
வெள்வளைப் பாணி மையுண் மடந்தையர்
மாய வேட்கையில் வீழுபு நாளும்
கைப்பொரு ளல்கிப் பொய்ப்படு மின்பங்
கள்வரிற் பகரு மொள்வரி விழியார்
மோகசா கரத்துண் மூழ்கியுண் மாழ்கிபு
போகம வாவிச் சோகம தாகி
யாக மிளைப்ப ரோக மடர்ப்பப்
பலபல புன்க ணிறுதியிற் படவே
வாளா வாய்வெரீஇ யலந்தழி வோரும்
பேதமைக் கந்தாப் பேரிடர் கொண்டு

நானிது செய்தே னென்னதிது வென்று
மியாமே யெமக்கிங் குறுதுணை யென்று
வெறும்பல் மொழிந்து கெடிது கழிவோரும்
போராட் டங்கொடு பொய்யுடர் நிலையெனு
வாளிர்க் கழிதல் வருந்துநீர் மைத்தே
என்னை யென்னை யிவ்வுல கிருக்கை
மன்னு வுலகத்து மின்னலின் மறையும்
பொய்வள ருடம்பிற் பொருந்து பல்லுயிரும்
நிலையர் தோடும் நிச்சய மிஃதே
(குறள்) நெருந லுளனொருவ னின்றிலை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகெனப் பேசுந்
தெய்வப் புலவர் திருவாக் கின்படி
எத்திறத் தவரு மிறந்தொழிந் தனரே
யகன்கண் ஞாலம் பொதுவின்றிப் புரந்த
விகலறு வேந்தரு மிறந்தொழிந் தனரே
பகரும் பிறவிப் பௌவத் தழுந்தி
நிலைகா ணாமே நெட்டுயிர்ப் பெறிந்து
தெருமர லுற்றுஞ் செவ்விதி னுணரா
இருவிழி யிருண் டிருடன் னுழன்
பஞ்சென் றிடுமடி பழுதா காமுன்
குருபர னென்னுமொழி நிலைக்குள் ளாழு
னறிமி னறிமி னறியா வுள்ளத்
தெல்லியும் விதிப்படி யெழுதுற நட்பிலவு
மந்திரத் தியங்கு நந்தச் பிறைமதி
மின்னென வொளிர்ப்ப விதவித வண்ணங்
காண்டற் கரிய காட்சியி னிலக்கவும்
காலமொடு திறம்பா விளந்தரு மழையும்
மழையா லுயிர்கள் மாண்பெற விளங்கவும்

பொழில்சூழ்ந் திடையிறம் புற்பூண் டுருவங்
கழைத்துச் செழித்துந் தங்கிய பெறுவெறுமைந்தும்
பாசிலை சில்லற பல்வேறு வண்ணங்
குயிற்றிய குயிற்றி யூதிதொழில் தனியு
சிருட்டித் தெவணுஞ் செருக் கடுபாடமற்
பொதுவறப் புரக்கும் புத்தேளங்கோன்
வித்தகர் புகழு மெய்த்தங்கி யோன்றனை
யருள்படு முனிவர் முன்னிலைத் தீயி
ரருநெறிச் செல்வ தெருளுறக் கேட்டிர்
காட்சிகா லவின்பதி கூழறவல் கேண்மின் (௬௫)
நந்தூர் வியல்சூழ் வுலத்தகு போரூர்
சலஞ்சலங் குமஞ்சூன் மாவரு தாளும்
முட்டாம் மரமிர புரிவங் கிழங் கினவுதிர்
கண்படு முன்னங் கெனிந்தளை கிடக்கும்
விழைவிறு வளவி முனைமுகந்து பருக
வரிச்சிறைத் தும்பி யுருக்கு பாண்டிமுற்றி
கொழுநனை தோறுங் குழூஉவொடு விரவும்
பளிங்குருக் கன்ன தடங்குநீர் நோடைப்
படர்மருப் பெருமை யீட்டங் கலக்குற
கயலினம் வெருவிக் கழையெனக் கதுவூஉ
கட்கம ழரம்பைக் கசிந்திழி நறவும்
பொரியரை மாவி னுருகுழ்க மதுவும்
விரைசெறி பலவின் குடம்பிழி தேனு
மாழிகொலோ வென் றழகரு மயிர்ப்பு
மடைப்புடைத் தோடு மலர்க்கடஞ் செறீஇய
கடுக்கையங் கண்ணி முகிலெறிய பாமன்
கறையினைக் கொண்டே கண்படு பழனத்
துழவ ருழத்திய ரொடுமனை தவழ்ந்து

கறையடி மரீஇக் கதிர்த் தாளரிம் பப்பூரில
பைங்கொடி யிடையிற் பாசிழைக் கரிமுகில்
காண்வரும் குவளைக் கண்ணார் வதனமுங்
கள்ளுண் சுரும்பர் மும்முருந் தறாயுவி
புலவுதின் மரைவெண் றுரைப்பன போறலும்
பூமலி குளிர்தண் பொதும்பர் புள்ளின
மிமைமா கண்ணெ சுவைமயிர்த் தோகை
பீலிவிரித் தெருபர் தாதுமன் மேல்
குடம்பை தெரிதும்புள் சூழுவிவா டமார்ப்பு
வன்பிணை நெகிழ்நா வின் றிருமகன் றிலுங்
துஞ்சலு பேர் பால் தாதுகல் லுண்ணு
காதன் மிகுகு இயும் மன்னமும் பேடுடன்
பொற்புறு கிள்ளையும் பெருந் துவி வோங்கால்
தண்ணீர் சிறலும் வித்வு மோங்கும்
லருப்பமா ரூபினின் றவொருபேக் தேரிறும்
புளிறு தரக் குப் றமெழா விழற்
ஈர்ங்கவிழ் கனிரோர் பிணை சுற்றி தியிறலும்
பழனக் கதிர் தெரறும் வளையினும் நூல
அரவொடு கிரி விடார்ந்த குபிற்ற
தரக்கொடு டாணினக் தித்தேர மென்னி
விழுங்கிய மாணினஞ் சிகிமுன்று தெவிட்ட
போதுவிர் துண் மரங்கண் மீதுள் மந்தி
பெண்டொடு கணிபறித் தெதிர்வினைய
கழ்ந்திட்டு சைவையர்கிரிபோ வினிய
முாற்றலும் றெவுன் வருத்தர நக் காண்பிந்
பரிசிலர்த் தாங்கு புந அப்பணர் வில்லெயிற்றி
மறுவிருந்து விளங்கிய பெறுக மவ்விடை
மல்லல் பெரும்புகழ் நானை பிறங்குறும்

விழுப்பமுங் குலனு மொழுக்கமுங் கல்வியுந்
நன்னிற் சிறப்புறீஇ நன்பெரி யாரைக்
கூஉய்முன் னின்றுதன் னேவல் கேட்குஞ்
சிறாஅர்த் தொகுதி நிரைநிரை யொருங்கு
விழைதகக் கவிக்குங் கொழும்புன் னிலத்து
நன்பல மொழிந்துங் குருவினை யுஞற்று
களிதுளும் புள்ளொடு தெளிவு பெரிதெய்தி
யாரு விருப்புர ணைங்கனுர் தலைவரோ
டிசிறிது நீத்த வுறுநலன் மறுகுற்
றொருங்குறு விருந்தோ யோம்பிட வானோர்
தறக்கு மென்னத் துறைதந்த மாடம்
மடவார் வதனம் மதிகண் டுயங்கும்
பாடின் னிசைப்புகல் பாணர் வம்மின்
கூத்தர் வம்மின் குறைந்தோர் வம்மின்
நச்சினோர் வம்மி னல்லற வென்னு
ஞெரேரெண் முகில்சூழ் தன்ன வழும்புல
தருவிலந் தோற்றங் கூய்மிசை கேட்குவிர்
முழுமுத லறிவின் முதல்வன் றந்த
முருகார் தொடையணி முருகிர வென்ன
நெஞ்சநெக் குருகிச் செஞ்சொற் குழற
மெய்விதிர் விதிர்ப்ப மயிர்முனை நிறுத்த
நாத்தழும் பேற வேத்துரை மொழியு
மின்னனார் துணையுடன் மிளிரிடம் பல்ல
தருக்குற லின்றித் திரூஉக்குடி மறையோர்
வாழ்க்கை பரந்த கோலமா னெறியிற்
சிறுபணி யமைத்துச் செறிந்துவா ழிடமும்
பளகறு மனைகள் பதிக்கின்ற வொருவன்
நனந்தலை நகரினை வளர்சிதிக் கிழவர்

கிளைஞ ரோடுபல் கெழீஇ யினரி வதியுந்
தளர்வில் போகத் தமனிய வீதியும்
வாட்கட் சிறுமகா ரம்மனைக் கழங்கு
மடிபெயர்த் தாடலு மாங்கு மோர்பால்
வண்டார் குழலியர் மதலையி டிகொண்
டிழ்புலீ ஆவென் றழைப்பன வோர்பால்
மணிகிடந் றியின் றோனெ றிவிக்கும் மேறுகும்
கண்டம் பின்றைக் கடிதவ ணிகன் றும்
நிதிபலி நல்லெழிற் றிருவீதி டிகளும்
நரம்பு பிணைத்திருக் தண்ணுமை பெரிதுநர்
வரைவெளி மருளும் புயங்கொண்டு பாடி
பாடின ரணிக் கேறப் வண்ணன்
மென்னடி பெயர்த்தினி தாட மகளிர்
குருநால் யிரத்துக் குறமகா ரொருங்கு
குறிஞ்சி பூடிக் கொட்டுவ பாணி
துடியிசை ல்பிணை யொருங்கா னியல
குடவளை யிமிர்காக் குருவாய்க் கிறிளி
பலம் திருப்பி யாலது மோர்பால்
வாணுதற் றிலகந் தகுதிய மின்னுந்
நடங்கண் டோசாவுங் கூத்தரு மோர்பால்
போக்கறு மெழுத்துசொற் பொருளியாப் பணியொடு
பத்துப் பாட்டு மெட்டுத் தொகையினுங்
பஞ்சகா வியமும் பதினெண் கணக்காம்
பரவை யுண்டு பாடுநர் ரொருபால்
உரைகண் டரிய வுரைகண் டெழுது
பொங்குநூ றேறிய புலவரு மோர்பால்
விரிந்தொழு கூ நுதலில் வரிந்த திலங்க
வாலவளை யுன்ன பாற்கெழு கழுத்தில்

விழிமணிக் கோவை யெழிலுறத் துவள
நுரைமுகந் தன்ன நொறில்கொழு மற்றவை
யரைமருங் கசைய வொருகரந் தனைகொண்
டரிய வத்துவிதக் கலையையுங் கூட்டி
யவஞான மிரீஇய வருள்கிளர்ந் தோங்கச்
சிவஞான போதச் செம்பொரு ளுரைத்துப்
பண்புறு சீட்டரைப் பார்வையி லாண்டுகொண்
டுருவுடன் வைகிய குரவரு மோர்பால்
செழுந்தழை விரைதெளி கற்பகம் பொதுளிய
வடவியி லிருந்தங் கருந்தவ முஞற்று
மைம்பொறி யடக்கு மொய்ம்பு மிகப்பெரியர்
பரம்பொரு ளேற்புப் பதிய மருங்கு
கொழுஞ்சுவை கெழுமிய செழுந்தமிழ்ப் பாவுள்
கற்றோறுங் கற்றோறுங் காழ்த்தபொருள் பயப்ப
என்புநெக் குருக மிசையுடன் றழீஇய
முருகு கலந்த வரிய கற்பினோர்
பன்னிதி தெரிக்குஞ் சந்நிதி முன்றமை
யாத்த பெரியோன் கடியரண் மட்டும்
சீரை யுடீஇய வணியினர் பன்னு
ளுண்ணு திளைத்த யாக்கையர் நீர்குண்டந்
தோவற விளங்கு மேனியர் மும்மலந்
தங்க ணில்லாத் தவசியர் பல்லோர்
புலியத ளார்ந்து புரிபக மோர்பால்
கண்டவ ணகன்று கதுமெனச் செல்லின்
பாங்குறு மிஞ்சியுட் பவமறக் குடைந்து
வானோர் நசையுறூஉம் வயங்கு நீறணிமி
னிருகரஞ் சிரங்கொளீஇ யடங்கா மதர்ப்புட
னங்கள் குருபரன் சந்நிதிக் காண்பின்

பாங்கார் சிலம்பின் மருவிய பிரணவ
பல்லோர் பகவன் றங்கு நிம்பத்தடி
காணூஉச் சிரம்பொழில் படநனி வணங்கி
இளங்கதி ரன்ன துலங்கொளி கோயில்
வாயிற் புகுமின் வல்லாங்கு பாடி
வண்டுழு துழக்குந் தண்டுழா யேனமு
முண்டக வாழ்க்கைக் கொண்டவே ரெகினமு
மண்ணகடு கிண்டும் விண்முகடு போழ்ந்துங்
காணா வண்ணங் கருத்தையுங் கடந்து
கீழ்மே லுருவ வாரழற் பிழம்பாய்
நின்றவெம் பரமன் றந்த விலையோன்
பொற்கா னிறுவி பொருவி னவமணி
குயிற்றிய நாற்கான் மண்டப நாப்பண்
பூமலி வாழ்க்கைப் புனிதனும் பூவா
ருவண வாகனனு முளங்குளிர்ந் தேத்த
கறைமிடற் றண்ணல் கனிந்துளம் பூப்ப
இமயம் பூத்த வுமைவுளங் களிப்ப
பாணிவேத் திரக்கர பகவ னந்தித்
திரளடித் தொதுக்கிச் செவ்விதிற் காப்பத்
தருநிழல் வைகுஞ் சதமகன் முதலோ
ரிருகரங் கூப்பிதன் னேவல் கேட்பப்
பூமகள் பாசடை புறமிருந் துதவ
நாமக ளின்னிசை நவில வானோ
ரணங் கம்மூவ ரருநடங் குயிற்ற
கோதை புனைத் தெய்வயானை வலமுறச்
சூன்மையார் குழலி வள்ளி யிடமுற
மயின்மே லாரோ கணிக்கும் பெருமனைக்
கண்ட வன்றே கழிந்தன பவம்பல

T.971
Gomc. Ch. 5–